காரை நலன்புரிச்சங்கம்(UK) - Karai Welfare Society(UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD1 3AH, UK
Tel: 01923 226000, Fax: 01923 238289, email: info@karainagar.org, www.karainagar.org Charity No 1126413

## PROJECTS FUNDED (£238,764) BY KWS (UK) SINCE 1994 - Aug 2016 (Still being updated…)

| YEAR | PROJECT DESCRIPTION | FUND PROVIDED |
|---|---|---|
| 2016 | Karainagar Hindu College land purchase fund raised | £16,425 |
| | Donation (KWS(UK) committee members) to backbone affected patient (Maappaanavoori) | £325 |
| | Buying land for pond near Venon bund | £2,500 |
| | Iron Syrup supply to Karainagar primary school children | £1,128 |
| | Karainagar Library Computer section fund | £1,500 |
| | Education fund for impoverished Karainagar students (via AGA) | £753 |
| | Computer centre furnishing (Kalai Ilakkiya Ariviyal Nadpuravaalar Vaddam) | £722 |
| | Arunasalam Book Publication | £250 |
| | Funding provided to 13 Karainagar Sports clubs (Jun 2016) | £3,103 |
| | Saiva Maha Sabai – Prizes & refurbishments (Jun 2016) | £300 |
| | Cataract camp in Mullithivu for 100 people through Enlightenment Circle – SMS(UK) | £2,500 |
| | Karainagar Muththamizh Peravai (Kalapoomy) | £300 |
| | Solar Lantern Donation to Karainagar through iEnergy (UK) | FREE |
| | | |
| 2015 | Karainagar Hindu College – Playground improvement – Money Allocation | £5,000 |
| | Suntharamoorthy School – Playground improvement – Money Allocation | £2,500 |
| | CTB – Grease pump | £450 |
| | Karainagar Muththamizh Peravai (Kalapoomy) | £300 |
| | | |
| 2014 | 4th Cataract Surgery fund | £950 |
| | Dr.S.Sabaratnam's medical camp | £500 |
| | Karai Manivaasakar sabai | £200 |
| | Valanthalai Hospital permanent fund deposit | £5000 |
| | Fund allocated to refurbish wells, ponds, etc. to provide water | £2500 |
| | Sadaiyaali school computer room refurbishment | £300 |
| | Karai Central Development society computer room furniture | £250 |
| | 1800 books and furnitures sponsored to Karainagar library | £5000 |
| | Kalapoomi _ Ayural Vetha Hospital Land Purchase. | £5,910 |
| | Urri – School Pavilion | £500 |
| | Kalapoomy – Yogaraniyam – Water pump | £460 |
| | Kalapoomy Kalaiyakam | £450 |
| | | |
| 2013 | 3rd Cataract Surgery | £2530 |
| | Dr.S.Sabaratnam's medical camp | £650 |
| | Valanthalai Hospital male&female ward fully refurbished | £4000 |
| | Karai Hindu College deposit | £5000 |
| | Subramaniya vithiyasaalai New road | £500 |
| | Karai Manivaasakar sabai | £200 |
| | Fund to volunteer teachers at Vanni leading schools through DEEP Global | £1000 |
| | Karainagar ibrary furniture sponsored | £1000 |
| | Suntharamoorthy N V – Allady School | £875 |
| | Yoga class @ Yogaraniyam – Yoga class | £250 |
| | Thoppokaddu School Photocopier | £300 |
| | | |
| 2012 | Karai Mani Vaasakar Sabai | £100 |
| | Valanthalai Hospital Kitchen refurbish | £400 |
| | Kovinthan school children park and other refurbishment work | £500 |
| | Sand deposit to play ground and permanent electricity connection to digital library and of KHS | £900 |
| | Viyaavil Hindu school refurbishment work | £525 |
| | 25 acres land purchase for water reservoir plan in Kalapoomy | £1350 |
| | Evening English and computer lesson | £900 |

127 Cassiobury Drive, Watford, Herts WD1 3AH, UK
Tel: 01923 226000, Fax: 01923 238289, email: info@karainagar.org, www.karainagar.org Charity No 1126413

| | | |
|---|---|---|
| | teachers payment to Yarlton college | |
| | Suntharamoorthy N V – School Playground Improvement | **£1,500** |
| | | |
| **2011** | Valanthalai Junction Bus Stand – Building a bus shelter for memorial of Mr Thiliampalavaner. | **£6,000** |
| | 1st Cataract Surgery | **£2400** |
| | Purchase a plot of land to build a reservoir at Kalapoomi. | **£550** |
| | Jaffna GeneralHospital- Recovery area for the Cardiac Catheterisation Laboratory. | **£3,000** |
| | | |
| **2010** | Improvement works to school – Money has been sent to KAS, but works still to be identified. Money allocated to Uri, Palavodai, Suntharamoorthy Nayannar Vidayalam. | **£3,500** |
| | Helping Internal Displaced People (IDP)- Medicine, cloths and food for IDP camp. | **£14,500** |
| | Drinking Water Supply-Bowser – Purchased a new 5,500 litre small ELF Bowser. | **£15,500** |
| | Drinking Water Supply Bower – Purchased a new Askoh Leyland lorry that mounted with a new 13,500 litre stainless steel tank. | **£28,000** |
| | Chunaham well repair & replace of water pump and bowser repair. | **£1,600** |
| | | |
| **2009** | MoolaiHospital– improvement works. | **£500** |
| | Dr A Thiyagarajah MMV Junior School- Building improvement works. | **£1,000** |
| | Kilinochi Emergency Relief Fund. | **£1,000** |
| | Mr Nadarasa Sivanesan Kidney Transplant. | **£1,200** |
| | | |
| **2008 & 2007** | Suntharamoorthy Nayannar – Library Furniture. | **£1,000** |
| | Valanthalai Junction Bus Stand- Purchase a plot of land for bus stop & shelter. | **£1,000** |
| | Drainage improvement works- Refurbish and clear out existing drainage channel. | **£2,000** |
| | Supramaniya Vidayalam- Buildings refurbishment. | **£2,000** |
| | PalavodaiSchool | **£1,000** |

| | | |
|---|---|---|
| | | |
| **2006** | YarltonCollege–Library Books / drinking water tanks. | **£1,100** |
| | Water Containers – water container for drinking water distribution. | **£1,000** |
| | Spillways / Culvert repairs. | **£800** |
| | Viyavil Saiva Vidayalam – Set up a Library /Readingroom. | **£1,000** |
| | Hospital – Dental Clinic equipment, patient's dinning room. | **£1,300** |
| | PalavodaiSchool. | **£1,000** |
| | | |
| **2005** | Drinking water Supply Project – Purchase water bowser, holding tanks etc. | **£17,000** |
| | Tsunami Relief – TRO / White Pigeon. | **£500** |
| | Dr A Thiyagarajah MMV – Computer room improvements. | **£1,500** |
| | | |
| **2004** | Computer & printer to Yarlton College | **£1,500** |
| | Hospital refrigerator, bed and Ambulance repair | **£2,000** |
| | Help to elders home near Sivakaami Amman Kovil | **£300** |
| | Meikandaan School | **£1,000** |
| **2003** | Hospital – Electricity Generator. | **£1,000** |
| | Valanthalai North AM School | **£2,000** |
| | | |
| **2002** | Suntharamoorthy Nayanar Vidyalayam. | **£1,500** |
| | Viyavil Saviva Vidalayam. | **£1,000** |
| | Thikkarai Rural Development Society. | **£1,000** |
| | | |
| **2001** | Dr A Thiagarajah MMV – New Block start up fund | **£6,000** |
| | | |
| **2000** | Viyavil Saiva Vidayalam. | **£1,350** |
| | Dr A Thiyagarajah MMV – New Block start up fund. | **£3,000** |
| | TRO | **£300** |

| | | |
|---|---|---|
| **1999** | Viyaavil Viththiyaalam – Machine & laboratory furnitures | **£1,350** |
| | Thiagarajah Sivasubramaniam funeral expenses | **£1,450** |
| | Displaced people in Vanni through IBC | **£300** |
| | Library & furnitures to Thiagarajah Maha Viththiyaalayam | **£9,000** |
| | Hospital | **£1,500** |
| | Yarlton College | **£1,580** |
| | | |
| **1998** | Thiagarajah Maha Viththiyaalayam – For displaced children needs | **£1,500** |
| | | |
| **1996** | Fund sent through TRO & Scot to displaced people | **£1,000** |
| | | |
| **1995** | Educational fund to both children & university students | **£500** |
| | | |
| **1994** | Educational fund to displaced children in Siththankeni and Sulipuram | **£150** |
| | Educational fund to Jaffna University Karainagar students | **£800** |
| | Valanthalai American Mission School | **£2,000** |
| | Electric Generator to Karainagar hostpital | **£1,000** |
| | | |
| | **TOTAL** | **£238,764** |

24-07-2016

## காரைச் சங்கமம் 2016 (தியாகச் சங்கமம்) புதுப் பொலிவுடனும் புதியவர்களின் வருகையுடனும் சங்கமித்தது



மனத்துடன் வந்து இனத்துடன் இணையுங்கள் என்றோம்.............. எம் மக்கள் இனத்துடன் வந்து மனத்துடன் மகிழ்ந்தார்கள்,!!!!! பொதுப்பணிகளில் இருந்துகொண்டு ஊருக்கு துரோகம் விளைவிப்பவர்கள் ஆலயங்கள் சென்று பாவமன்னிப்பு வேண்டி மண்டாட வேண்டிய காலம் வெகுவிரைவில் !!!! அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உரை!! பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டியுடன் கூடிய ஒன்றுகூடலான காரைச் சங்கமம் நேற்றைய தினம் அமைதியான முறையில் அட்டகாசமாக நிறைவுற்றது.

**இம்முறை நீங்கள் தவறவிட்டிருந்தால் காரைச் சங்கமம் 2017 இல் தவறாது இணையுங்கள்**



08-06-2016

## முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட நோயாளியின் சிகிச்சைக்கு லண்டன் காரைநலன்புரிச்சங்கம் மிகுதி நிதியை வழங்கியது!

முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட நோயாளியின் சிகிச்சைக்கு லண்டன் காரைநலன்புரிச்சங்கம் மிகுதி நிதியை வழங்கியது!

முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட நோயாளியான மாப்பாணவூரியைச் சேர்ந்த திருமதி ஜெகதீஸ்வரன் லோகேஸ்வரியின் மருத்துவ செலவுக்காக லண்டன் காரைநலன்புரிச்சங்கம் மிகுதி நிதியான அறுபத்தையாயிரம் ரூபாவினை (65,000.00)காரைநகரில் இயங்கும் உப குழு மூலம் வழங்கியுள்ளது. இவ் உதவித்தொகை வழங்கும் வைபவம் இன்று பி.ப 4.00 மணியளவில் வியாவில் ஐயனார் ஆலய கணபதீஸ்வரக்குருக்கள் நுலகத்தில் உப குழுவின் தலைவர் க.சோமசேகரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டது. நோயாளியின் சார்பில் அவரது கணவர் ஜெகதீஸ்வரன் வருகைதந்து இப்பணத்தினை பெற்றுக்கொண்டார்.



31-05-2016 to 04-06-2016

## மீண்டும் வன்னியில் பார்வை கொடுத்தது பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கம்

பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்தின், காரை மண்ணைத் தாண்டிய சேவைகளில் மீண்டும் ஒரு மைல் கல்லாக தடம் பதிக்கிறது முல்லைத்தீவு மக்களுக்கான கண்படர் அகற்றல் சிகிச்சை(Cataract Surgery ).
வவுனியா அரசு வைத்தியசாலையில் கடந்த வைகாசி 31ம் திகதி முதல் ஆனி 4ம் திகதிவரை நடைபெற்ற கண்படர் அகற்றல் சிகிச்சை முகாமில் 500 வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும், கண்படர் நோயினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு , மன்னார் , கிளிநொச்சி , வவுனியா ஆகிய இடங்களில் வாழும் மக்களுக்கான சிகிச்சை செய்து முடிக்கப்பட்டது. இதில் முல்லைத்தீவு மாவட்த்தில் தெரிவு செய்யப்பட்ட 100 வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கான மேற்படி சிகிச்சையை பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கம் நிதியுதவி வழங்கி நிறைவேற்றியுள்ளது. இந்த நிதியானது பிரித்தானியாவில் உள்ள எமது காரைமண் சார்ந்த வர்த்தக நிறுவனங்களில் உண்டியல்கள் மூலம் பெனிபெனியாய் சேர்க்கப்பட்ட பணம் என்பது இங்கே குறிப்பிடத்தக்க ஒரு விடையம்.
இதுவரை காலமும் பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கம் பெனிபெனியாய் சேகரித்த பணத்தில் இதுவரைகாலமும் ஒரு மில்லியன் ரூபாய்களை(£5,500.00) வன்னிப்பகுதியில் சுகாதார சேவைக்கென வழங்கியுள்ளது.






20-05-2016

## பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்திற்கு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.குலதாசன் பாராட்டு!




பிரித்தானிய காரை நலன்புரிச்சங்க நிதியுதவியுடன் காரைநகர் முன்பள்ளி மாணவர்களிற்கான இரும்புச்சத்தது பாணி மருந்தினை முன்பள்ளிஆசிரியர்களிடம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். பிரித்தானிய நலன்புரிச்சங்க நிதியுதவியுடன் காரைநகர் முன்பள்ளி மாணவர்களிற்கான இரும்புச்சத்து பாணி மருந்துகள் ஆசிரியர்களிடம் வழங்கும் நிகழ்வு இன்றைய தினம் 20.05.2016 வெள்ளிக்கிழமை காரைநகரில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிஎஸ்.குகதாஸன், காரைநகர் பொது சுகாதார வைத்திய அதிகாரி, முன்பள்ளிஇணைப்பாளர், பிரித்தானிய காரைநலன்புரிச்சங்க காரைநகர் பிரதிநிதி உட்பட முன்பள்ளி ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

16-05-2016

## ஆண்டுகள் சில கடந்தாலும் ஆழமான சிந்தனையின் அபிவிருத்திக்கான அடிக்கல் நாட்டுவிழா!!!




பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்தின் கடந்தகால பிரமாண்ட வேலைத் திட்டங்களில் ஒன்றான ஆயுள்வேத வைத்தியசாலை நிர்மான கட்டுபணி வேலைகளுக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று (16/05/2016) ஆரம்பம்.
காரை மண்ணில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று அமையவேண்டும் என்று பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கம் கடந்த 2013ம் ஆண்டு அப்போதைய காரை அபிவிருத்தி சபை நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க **1.3மில்லியன் ரூபாய்கள்**செலவில் களபூமியில் காணி ஒன்றினை கொள்வனவு செய்து இத் திட்டத்திற்கு வழங்கி இருந்தது.
இதற்கான கட்டுமான பணிகள் நேற்றையதினம் அடிக்கல் நாட்டப்பட்டதையிட்டு பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது.

09-04-2016

## இரண்டுவயதுப் பாலகர்களையும் ஈர்த்துவிட்ட "Karai Kutties" - KYO(UK) organised its first ever Karai Kutties Fun Day





பிரித்தானிய காரை இளையோர் அமைப்பின் "Karai Kutties-சிறப்புச் சிறுவர் குதூகலக் கொண்டாட்டம் "ஏப்ரல் மாதம் 9ம் திகதி Elmfield அரங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றது.
சிறுவர் நிகழ்வென்பதால் "Health&Safety" காரணங்களுக்காக '50 சிறுவர்கள்' என மட்டுப்படுத்தப்பட்டிருந்தப்போதிலும், அங்கு ஆவலாய் வருகைதந்த எம்தம்பி தங்கைகளை திருப்பிஅனுப்ப மனமில்லாமல்,
அவர்களையும் இணைத்துக்கொண்டு கொண்டாட்டம் ஆரம்பமானது.
ஊரில் பல மைல் தூரம் சைக்கிள் மிதித்து படிக்கசென்றது போல இங்கு பல மணித்தியாலம் "டிரைவ்"செய்து பிள்ளைகளுக்காக வந்தோம் என பெற்றோர் கூறியபோது பெருமிதத்தை 89உணர்ந்தோம்.
"5வயது "தான் ஆரம்ப வயது என்று இணையத்தில் பிரசுரித்திருந்தாலும் கூட மீண்டுமொருமுறை சிறுவர் வாழ்க்கையில் சிறகடித்துப் பறப்பதற்கு எமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம் இதுவென்பதனை நன்குணர்ந்த நாங்களும் சின்னஞ்சிறியவர்களோடு ஈடுகொடுத்து வயிறுவலிக்கச் சிரித்து மகிழ,
நெஞ்சம் மறக்காத இந்த மாலைப்பொழுது 6.30மணியளவில் இனிதே நிறைவு பெற்றது. மண்பத்தைவிட்டு வெளியேற மனமில்லாமல் தயங்கிய சின்னஞ்சிறியவர்களை "next time"என்று சமாளித்து பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச்சென்றபோது "சாதித்துவிட்டோம் நாங்கள்"என்ற பூரிப்பு எங்களனைவர் மனதிலும் !

12-03-2016

## காரைநகர் நலன் புரிச்சங்கம்– பிரித்தானியா கிளை காரை மண்ணில். பல புதிய திட்டங்களுக்கான 1மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு .....



பிரித்தானிய காரை நலன் புரிச்சங்கம் , எமது காரை மண்ணிற்கான எங்கள் நிர்வாகக் கிளையை ''காரைநகர் நலன் புரிச்சங்கம் '' எனும் பெயரில் ஆரம்பித்துள்ளது. கடந்த ஞாயிறு (06/03/2016) அன்று நடைபெற்ற எமது மாதாந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் இந்த உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்பட்டன..
மேலும் எமது மன்றத்திற்கு கிடைக்கப்பெற்ற கீழ்காணும் கோரிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன. மருதபுரம் அபிவிருத்தி சபையினரால் வழங்கப்பட்ட கோரிக்கைகளும் ஆராயப்பட்டு, மேலதிக தவகல் விபரத்திற்காக எமது காரைநகர் கிளையின் உதவி நாடப்பட்டுள்ளது. வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலையின் மைதான காணி கொள்வனவு கோரிக்கை (அப்புத்துரை பாடசாலை ), வலந்தலை வைத்தியசாலை கோரிக்கைகள்( இரத்த பரிசோதிப்பு உபகரணம்,, X ray கருவி என்பன கொள்வனவு ), தங்கோடை கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் வழங்கப்பட்டிருந்த தங்கோடை முன்பள்ளிக்கான தண்ணீர் தாங்கி அமைத்தல், மற்றும் சுடலைகள் புனருத்தாரண வேலைகள் சம்பந்தமான வேலைத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் என்பனவும் பரிசீலிக்கப்பட்டு
எமது பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின், புதிய காரைநகர் கிளையின் நிர்வாகத்தினருக்கு எமது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

22-02-2016

## Solar Lantern Donation to Karainagar





iEnergy sought to donate 10 solar lanterns to impoverished and vulnerable families currently living without electricity in Sri Lanka. With the support of Karai Welfare Society (UK) and Mr. Kanthasamy from Karainagar we were able to identify 5 beneficiaries, who were each using 2 kerosene lamps to light their homes. Rather than donate 1 solar lantern each to 10 families, it was decided that it would be more impactful to donate two solar lanterns (a Leader EP-31 and a D.light S2) to each of the 5 families.

23-01-2016

## காரை கதம்பம் 2016 - நிகழ்வு அறிக்கை - Karai Kathambam 2016 - Event Report



**பிரித்தானியா காரை நலன்புரிச்சங்கத்தின் "காரை கதம்பம் 2016" நிகழ்வு Preston Manor School, Wembley, London, HA9 8NA எனுமிடத்தில் 23/01/2016 (சனிக்கிழமை) வெகு விமரிசையாக நடைபெற்றது.** மங்கள விளக்கேற்றல், காரை கீதம், மௌன அஞ்சலி மற்றும் வழமையான கலை நிகழ்ச்சிகளுடனும் எம்முறவுகளின் பேராதரவுடனும் நிகழ்ச்சிகள் களைகட்டின. நடனங்கள், வயலின், பாட்டுக் கச்சேரிகள் என பல்வேறு நிகழ்சிகளை எமது சிறார்கள் திறம்பட வழங்கியிருந்தார்கள்.

கடந்த ஆண்டு காரைக் கதம்ப விழாவில் பிரசவமான எமது செல்லக்குழந்தையான பிருத்தானியா காரை இளையோர் அமைப்பு மிகவும் சிறப்பான முறையில் தங்கள் ஓராண்டு செயல்த்திட்டங்களை தொகுத்து காணொளி முன்னிலைப் படுத்தல்(**Video Presentation**) ஒன்றை சபையோருக்கு ஒரு நிகழ்வாக வழங்கி அனைவரினதும் பாராட்டை பெற்றனர். இக்காணொளியினை கீழுள்ள இணைப்பில் நீங்கள் கண்டுகளிக்கலாம்:

www.youtube.com/watch?v=HRx_UX6nUIc

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற எமது பிரதம விருந்தினரான வைத்திய கலாநிதி திரு தம்பையா வாமதேவன் அவர்களின் சிறப்பு உரையில் எமது இளையோரின் பங்களிப்பு எவ்வளவு திறம்பட உள்ளதென்பதனையும் எமது சங்கத்தின் செயற்பாடுகள் எவ்வாறு திறம்பெற நடைபெறுகின்றதென்பதனையும் எடுத்துரைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து எமது சங்கத்தின் தலைவர் திரு சு கோனேசலிங்கம் (நாதன்) அவர்களின் உரை இடம்பெற்றது. இதன்போது எமது நிகழ்கால மற்றும் எதிர்கால திட்டங்கள் பற்றிய விளங்கங்களை சபையோருக்கு எடுத்துரைத்தார். மேலும் பிருத்தானியா காரை நலன் புரிச்சங்கத்திற்கும், காரை அபிவிருத்தி சபைக்கும் இடையிலான சில நிர்வாக சிக்கல்களை பற்றியும் குறிப்பிட்டார்.

இதன்போதுஇ தலைவர் அவர்கள் எமது சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் நால்வர்களையும் (ராஜேந்திரா, சுந்தரதாசன், நாகேந்திரம் மற்றும் தவராஜா) மேடைக்கு வந்து தங்கள் கருத்துக்களை சபையோர்முன் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொண்டதிற்கு இணங்க அவர்களும் தங்கள் சார்பான கருத்துக்களை பதிவு செய்திருந்தனர்.

எம் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் அனைவரும் ஒரே மேடையில் ஒன்றாக நிற்பது என்பது பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் ஒற்றுமையின் வெளிப்பாட்டை அனைவரிற்கும் பறைசாற்றுவதாகவும் கூறிய பொழுது அரங்கமே அதிர்ந்தது.

இதனைதொடர்ந்து,மேலதிக நிகழ்வுகள் நடைபெற்று பங்குபற்றியவர்களிற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிதே நிறைவேறியது. கலந்து கொண்ட மக்கள் இராப்போசனத்திலும் கலந்துகொண்டு மகிழ்ச்சியுடன் வீடுதிரும்பினர்

02-01-2016

## பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்தின் அனுசரணையில் காரைநகர் நூலக கணினி பகுதி



05-12-2015

## 2015 நத்தார் தினக் கொண்டாட்ட படங்கள் / X-Mas Party 2015 photos



22-11-2015

## நூல் வெளியீடு - சைவ ஆசிரியர்களை தோற்றுவித்த திரு ச.அருணாசலம் உபாத்தியாயர்/Book Publish

127 Cassiobury Drive, Watford, Herts WD1 3AH, UK
Tel: 01923 226000, Fax: 01923 238289, email: info@karainagar.org, www.karainagar.org   Charity No 1126413




சைவ ஆசிரியர்களை தோற்றுவித்த திரு ச.அருணாசலம் உபாத்தியாயர் (1864- 1920). (மீழ்பதிப்பு 2015)
காலம் :- 22/11/2015 ஞாயிற்றுக்கிழமை , மாலை 04:30மணியளவில்
இடம் :-Highgatehill Murugan Temple Hall
200A Archway Rd, London N6 5BA.
காரைமண் பெற்றெடுத்த மகான் சங்கரப்பிள்ளை அருணாசலம். யாழ்ப்பாணத்தின் மூன்று தமிழ் சார்ந்த சமயக் கண்கள், அதில் ஒருவர் எம் அருமை அருணாசல உபாத்தியாயர். மற்றிருவர் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலப் பெருமான்( 1822- 1879) மற்றும் திரு.சு .இராசரத்தினம்(1884-1970) ஆவர் .

18-10-2015

## வருடாந்த பொதுக் கூட்டம் (18-10-2015) - Annual General Meeting (18-10-2015) - புதிய நிர்வாக குழு 2015-2016 - New committee 2015-2016



KARAI WELFARE SOCIETY(U.K) COMMITTEE MEMBERS

மேற்படி மன்றத்தின் பொதுக் கூட்டம் இன்று காலை **(18/10/2015)11:30**மணியளவில் **17, Stonefield Close , Ruislip, London, HA4 0XT** எனும் இடத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் சுமுகமான முறையில் நடைபெற்றது. திரு.K . ஒப்பிலாமணி அவர்களின் தேவாரத்துடன் தலைவர் திரு .S .கோணேசலிங்கம் தலைமையில் ஆரம்பமானது . தொடர்ந்து தலைவர் அறிக்கை, செயலாளர் அறிக்கை , பொருளாளர் அறிக்கைகள் முறையே சபையினர் முன்வைக்கப்பட்டு சபையினரால் ஆமோதிக்கபட்டது.

அடுத்து வந்த காரைக் கண்ணோட்டத்தில், சபையினர் கேள்வி பதில் நிகழ்வில், வழமைபோல் பல காரசார விவாதங்கள் (குடி தண்ணீர் விநியோகம், பிரித்தானியாவில் எமது மன்றத்திற்கென சொந்தமாக ஒரு இடம் கொள்வனவு செய்தல், காரை தீபம் **2015**– வெள்ளி விழா விமர்சனம், நூல்நிலையம் என பல) இடம்பெற்று புதிய நிர்வாகத்தினரால் ஆராயப்பட்டது .

இறுதியாக நிதி ஒதுக்கீட்டின் போது, மன்றத்தை அணுகியிருந்த மூன்று வேண்டுகோள்கள் ஆராயப்பட்டு,அதில் இரண்டு வேலைத்திட்டங்களுக்கு**1.5 மில்லியன் ரூபாய்கள்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவையாவன , கலாநிதி ஆ தியாகராஜா ம.ம.வித்தியாலய மைதான சுற்றுமதில் நிர்மாண வேலைகள் , மற்றும் யா/சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலய மைதான புனருத்தாரணம், புதிய **Photo copier equipment** கொள்வனவு செய்தல் என்பனவாகும்.

**புதிய நிர்வாக உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு :-**

தலைவர் — திரு .S .கோணேசலிங்கம்
உப தலைவர் — திரு .V .நாகேந்திரம்
செயலாளர் — திரு .P.சிவானந்தராசா
உப செயலாளர் — திரு .S .சிவபாதசுந்தரம்
பொருளாளர் — திரு .B .கஜேந்திரன்
உப பொருளாளர் — திரு . P . ஞானாநந்தன்

**நிர்வாகசபை உறுப்பினர் :-**

1) Dr .K .சந்திரசேகரம்
2) திரு. T.தனபாலன்
3) திரு .S .கிருபாகரன்
4) திரு. K .விக்கினேஷ்வரன்
5) திரு .K . பாலகிருஷ்ணன்
6) திரு .S .சிவராஜா
7) திரு .V .நடராஜா
8.) திரு. R .சிவசுப்ரமணியம்
9) திரு. K .ராஜரட்ணம்
10) திரு . T.தேவானந்தம்
11) திருமதி . C .சர்வானந்தன் .

**போஷகர் சபை உறுப்பினர்கள்**

1) திரு R .சுந்தரதாசன்
2) திரு P . தவராஜா

03-10-2016

## "காரை தீபம் 2015"

பிருத்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் **25**வது ஆண்டு நிறைவு வெள்ளி விழா**03/10/2015** அன்று **750**இக்கும் மேற்பட்ட மண்டபம் நிறைந்த மக்களுடன் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. **600** இருக்கைகள் கொண்ட அழகான மண்டபத்தில் இருக்கைகள் நிரம்பியபோதும் **150**இக்கும் மேற்பட்ட மக்கள் மண்டபத்தின் வெளியே கூடியமர்ந்து கொண்டாடினர்.



25/26th June 2015

## Kilinochchi cataract operations Programme

There were 98 cataract operations took place in Kilinochchi hospital on 26th July. Surgeries were performed by Dr J D Dias Consultant Eye Surgeon TH Batticaloa. The event was funded by Karai Welfare Society UK, and facilitated by Assist RR, UK,and Enlightenment Circle, UK.
This occasion was graced by Dr Paitha Mahipala DGHS & NFP of Vision 2020. Mr Sri Skandarajah represented Assist RR at this occasion. Operations were started early in the morning and and all the cases (98) were completed by the late evening. Photos attached below;

Karai Welfare Society UK thanks to;
Dr P G Mahipala for the guidance, support and his presence
Dr J D Dias for his continued dedicated work
Mr Sri and Dr Sarveswaran of Assist RR UK for supporting
Dr Karthi MS of DGH Kilinochchi and Dr Anusha all the staff for all the hard work
Companies provided the phaco machines
Director of TH Batticaloa Dr Ibralebbe for releasing and facilitating Dr Dias
Transport unit of MoH and Mr Jayasuriya for extra careful driving
Assist RR and Enlightenment Circle for facilitate.






## கிறீஸ் பம் அன்பளிப்பு

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் காரைநகர் சாலை அலுவலகத்திற்கு லண்டன் காரைநலன்புரிச்சங்கம் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான கிறீஸ் பம் ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளனர். இதன் காரணமாக காரைநகர் மக்களிற்கான தடையில்லாத சீரான போக்குவரத்தினை வழங்கமுடியும் என சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வளவு காலமும் நல்லநிலையில் கிறீஸ்பம் இல்லாதபடியினால் போக்குவரத்து பஸ்களை சீராக பராமரிக்க முடியாதிருந்ததனால் பஸ்கள் அடிக்கடி பழுதடைந்தது.
இதனால் மக்களிற்கான போக்குவரத்து சேவையும் பாதிக்கப்பட்டன. லண்டன் காரை நலன்புரிச்சங்கத்தின் இவ் அன்பளிப்பின் மூலம் இயன்றளவு தடையில்லாத சேவையை வழங்கமுடியும் என போக்குவரத்து அதிகாரிகள்தெரிவித்தனர். லண்டன் காரை நலன் புரிச்சங்கத்தினால் அன்பளிப்புச்செய்யப்பட்ட கிறீஸ் பம் இனையும் இந் நிகழ்வில் கலந்துகொண்ட நலன்புரிச்சங்க பிரதி நிதியுடன் சாலை அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

